ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 12 ஜூன் 2007 கானம் : 11

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 137 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 5 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | ... | 7 |
| 5. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-21 | .... | 9 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை-109 | ... | 11 |
| 7. | மாலே மணிவண்ணா - 52 | ... | 14 |
| 8. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | ... | 17 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-135 | ... | 20 |
| 10. | செய்திகள் | ... | 23 |


ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

**விருத்தம்**

*சொல்லாமலே சொல்லி, கேட்காமலே கொடுத்து*
*நாமறியாமலே நம்மை இயக்கி அன்புடனே துன்புறுத்தி*
*வாக்கிற்கும் மனதிற்கும் அறிவிற்கும் எட்டாத*
*தானே தானே ஆன அந்நிலையைத் தானே*
*தருபவராம் குருநாதர்.*

**ராகம் : ஆபோகி** **தாளம் : ரூபகம்**

**பல்லவி**

*வீழ்ந்தவரென்றும் மீண்டது தானுண்டோ அல்லது*
*மாண்டது தானுண்டோ - ஸத்குருநாதன் பார்வையில்*
*(வீழ்ந்தவர்)*

**அனுபல்லவி**

*(பல்)ஆண்டுகள் செய்திடும் தவப் பயனை*
*பார்வை ஒன்றிலே - கடைக் கண்*
*பார்வை ஒன்றிலே தந்திடும் குருநாதன் பார்வையில்*
*(வீழ்ந்தவர்)*

*புலிவாயிற்பட்ட ஆடும் குரு வாயிற்பட்ட சீடனும்*
*குரு அருள் பெற்ற ஜடமும் பசு பக்ஷி மிருகங்களும்*
*மீளவே மீளாது இது சத்தியம் குருநாதன் பார்வையில்*
*(வீழ்ந்தவர்)*

**நாமாவளி**

*பிருந்தாவனமே உன் மனமே!*
*லீலைகள் நடந்திடும் தினம் தினமே!*
*குருவின் அருளால் வளர்ந்திடுமே!*
*ஒரு நாள் அவனிடம் ஒன்றிடுமே!*

வட இந்தியாவில், ஸ்ரீ ஞானேஸ்வர் மஹாராஜ் சமாதியைச் சுற்றி அனேக பஜனை மடங்கள் இருக்கும். அங்கெல்லாம், தொடர்ந்து நாமகீர்த்தனம் நடந்துகொண்டேயிருக்கும். அதுபோல், குருநாதர் ஸ்ரீ போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தின் பக்கத்தில் எப்பொழுதும் மஹாமந்திர நாமகீர்த்தனம் நடந்துக் கொண்டியிருக்க வேண்டுமென்று பரனூர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் பிரேரணையால் அங்கு சைதன்யகுடீரம் என்று ஒரு மடம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அதன் முழு பொறுப்பையும் திரு. தீனதயாளன் ஏற்றுக்கொண்டு செய்து முடித்துள்ளார்.

பெங்களூரில், வேதவியாஸ புராண பாடசாலை, கல்கரே கிராமம் ராமமூர்த்தி நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் தொடர்ச்சியாக ஜூன் 3-ஆம் தேதியன்று சுந்தர ஹனுமான் பிரதிஷ்டையும் நடைபெறவுள்ளது. இதன் பொறுப்பை பெங்களூர் திரு. சங்கரநாராயணன் ஏற்றுக்கொண்டு செய்து வருகிறார்.

இதுநாள்வரை, சீர்காழி-திருநாங்கூரிலுள்ள வைணவஆகம பிரபந்த வேத பாடசாலை ஒரு வாடகை இடத்தில் நடந்து வந்தது. திரு. தீனதயாளன், புதிய வீடு ஒன்றை வாங்கி, அதைச் சீர்செய்து, பாடசாலைக்குத் தயாராக்கும் முழுப் பொறுப்பையும் தாமே ஏற்று செய்துகொண்டு வருகின்றார்.

மேலும், பிருந்தாவனத்தில் ஸ்ரீ யுகளப்ரதிஷ்டையும் சாமவேத பாடசாலையும் ஏற்படுத்துவதற்காக அங்கே கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சந்திரமௌலி - ஷோபனா சந்திரமௌலி தம்பதிகள், தங்களைப் பூரணமாக இதில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

கன்னியாகுமரியில், எந்த இடத்திலிருந்து ஸ்ரீ ஹனுமான் இலங்கைக்குத் தாவினாரோ, முக்கடல் சங்கமிக்கும் அதே இடத்தில், ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் பிரேரணையால், ஸ்ரீமத் ராமாயணத்தில் 24000 ஸ்லோகங்கள் உள்ளதால், ஆயிரம் ஸ்லோகங்களுக்கு ஒரு அடி என்ற கணக்கில் கொண்டு 24 அடியில் ஒரு ஆஞ்சநேயர் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இதன் பொறுப்புகளை, குருவின் கைங்கர்யமே வாழ்க்கையின் உண்மையான நிதி என்று கொண்டு வாழ்ந்த திரு. ராஜமாணிக்கம் நாடார் அவர்களின் குமாரர் Agsarcem, திரு. கிருபாகரமூர்த்தி மற்றும் குடும்பத்தினர் எடுத்து நடத்திக் கொண்டு வருகின்றனர். கன்னியாகுமரி மாயம்மா சமாஜத்தைச் சேர்ந்த, சேவையே வடிவான நாகர்கோயில் வழக்கறிஞர் திரு. ராஜகுஞ்சரம் அவர்கள் இந்தப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து உள்ளார்கள். திரு, பொன். பரமகுரு அவர்களும், சிவகாசி திரு. ஜெயராஜ் குடும்பத்தினரும் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மேலும், சென்னை சில்க்ஸ் அதிபர், திரு. நந்தகோபால் திருநாங்கூர் திவ்யதேசங்களில் ஒன்றான புருஷோத்தமன் சந்நிதியின் கைங்கர்யத்தை தாமே ஏகதேசமாக ஏற்றுக்கொண்டு பல லட்சங்கள் செலவழித்து செய்து வருகிறார். தமிழ்நாடு முழுவதும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் முயற்சியாலும், நம் ஸத்சங்க அன்பர்களின் முயற்சியினாலும், செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் திரள்திரளாக வந்து நாம கீர்த்தனம் செய்து நன்மையடைந்து செல்கின்றார்கள். **(தொடரும்)**

**- ஆ. பாக்யநாதன்**


***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***
**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நான் தனியாக எப்பொழுதும் நாமகீர்த்தனம் செய்து வருகின்றேன். அப்படியிருக்க, வாரந்தோறும் நடக்கும் கூட்டு நாமகீர்த்தனத்தில் நான் கலந்துக்கொள்ள வேண்டுமா?*

பதில் : ஒரேயொரு ரோஜா புஷ்பம், தனியாகயிருந்தாலும் வாசனை தரும். அதுவே, ஒரு கூடை, பத்து கூடைகள் என்று ஒரு இடத்தில் சேர்ப்போமானால், அதன் வாசனை ஊரையே கூட்டும். அதுபோன்று, நாம் தனியாக கீர்த்தனம் செய்வதும் நல்லதுதான் என்றபோதிலும், பலர் சேர்ந்து கூட்டாகச் செய்யும்போது, அந்த இடத்தில் தெய்வத்தின் சாந்நித்யம் அதிக அளவில் வெளிப்படும் என்பது பொருத்தம்தானே!

*கேள்வி : பகவன் நாமகீர்த்தனம் செய்துவந்தபின், அதனால் மனதும் சுத்தமடையும். அப்படி சுத்தமடைந்தபின், கிடைக்கக்கூடிய பலன் என்ன?*

பதில் : ஆரம்பத்தில், நாமகீர்த்தனத்தை, ஒரு சாதனையாக, அதாவது ஒரு செயலாகக்கூட நினைத்து சொல்லி வருவோமானால், பிறகு காலக்கட்டத்தில் அதன் சுவை தெரிந்து சொல்ல ஆரம்பிப்போம். நாமாவின் ருசியை உணராமல் சொல்வது சாதனை. நாமாவின் ருசி தெரிய ஆரம்பித்தப் பிறகு சொல்வது சாத்தியம்.

*கேள்வி : நான் எவ்வளவு பெரிய பாவியாகயிருந்தாலும், நாமகீர்த்தனம் எனக்கு முக்தி தருமா?*

பதில் : ஒருவர் எவ்வளவு பாவம் செய்தாலும், எவ்வளவு புண்ணியம் செய்தாலும், எத்தனை கோடி பிறவிகள் எடுத்தாலும், அவை ஒரு கணக்கில் அடங்கத்தானே செய்யும். ஆனால், பகவானுடைய கிருபை என்பதை ஒரு கணக்கிற்குள் அடக்கமுடியுமா? ஒரு கிருபை, இரண்டு கிருபை, ஒரு லிட்டர், அல்லது 1 கிலோ என்று

பகவானுடைய அருளுக்கு அளவே கிடையாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவனுடைய அருளைப் பெற ஏங்கி, நாமகீர்த்தனத்தை விடாமல் செய்துகொண்டிருக்க வேண்டியதுதான்!

*கேள்வி : மஹான்களிடம் அபசாரப்படக்கூடாது. அப்படி அபசாரப் பட்டால், தீங்கு நேரிடும் என்று கூறுகின்றோம். மஹான்கள், கருணையே உருவானவர்கள் இல்லையா? அவர்கள் அப்படி தண்டிப்பார்களா என்ன?*

பதில் : மஹான்களுக்கு கிருபை என்பதும் ஒரு செயல் அல்ல. அவர்களுடைய கோபம் என்பதும் ஒரு செயல் அல்ல. நாம் செய்யக்கூடிய கைங்கர்யங்களிலோ, சாதனைகளிலோ ஏதோ ஒரு செயல், அவருடைய சந்தோஷத்தைத் தூண்டுமானால், அதுவே அவருடைய கிருபை. அதுபோல், நாம் செய்யக்கூடிய ஏதோ ஒரு செயல் அவருடைய மனதில் ஒரு வருத்தத்தை ஏற்படுத்துமானால், அதுவே, நமக்கு தீங்கு விளைவிக்கும். மஹான்கள், நெருப்புப் போன்றவர்கள். குளிர்காய்வதற்கு இதமாகயிருக்கும். விட்டில்பூச்சி போல் மேலே போய் விழுந்தால் பொசுக்கிவிடும்.

*கேள்வி : அறிவுள்ளவர் யார்?*

பதில் : கடவுள், அறிவிற்கு அப்பாற்பட்டவர் என்பதைப் புரிந்து கொண்டு, அறிவைக் கொண்டு அவரைத் தேட முயலாமல் அன்பைக் கொண்டு அவரைத் தேட முயற்சிப்பவனே உண்மையான அறிவாளி.

*கேள்வி : காயத்ரீ போன்ற மந்திரங்களை, பட்டுத் துணியினால் போர்த்திய பிறகு, உபதேசம் செய்கிறார்களே! ஏன்?*

பதில் : மந்திரங்களை ஜபம் செய்து, உச்சரிக்கும்போது, அதன் வீரியம் வெளியிலும் சிதறும். பட்டுத் துணிக்கு அப்படி சிதறும் மந்திர சக்தியை வெளியில் விடாமல் மீண்டும், நம்மிடமே சேர்க்கும் தன்மை உண்டு. அதனால்தான், காயத்ரீ மந்திரத்தை உபதேசம் செய்யும் பொழுது பட்டுத் துணியை போர்த்திக்கொண்டு செய்கிறார்கள்.

# மாதம் ஒரு புத்தகம்

'ஆந்திர மாநிலம் கர்னூல் அருகே ஒரு சிறிய கிராமத்தில் காஞ்சி மஹாபெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் Camp-ல் இருந்த சமயம். அப்பொழுது, ஸ்ரீசந்திரமௌலீஸ்வரர் பூஜைக்காக வில்வ இலைகளை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அப்பொழுது, மாயம்போல் ஒரு கூடை நிறைய பச்சைப்பசேல் என்ற வில்வம், மஹாஸ்வாமிகள் Camp செய்திருந்த இடத்தின் வாசலில் வைக்கப்பட்டிருந்தது. மஹாஸ்வாமிகள் அதைக்கண்டு மிகவும் ஆனந்தமடைந்து, அதைக் கொண்டுவந்தவர் யார்? என்று வினவ, அந்த நபர் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படியே தொடர்ந்து, தினமும் கூடை நிறைய வில்வதளங்களை யாரோ வைத்து சென்றுகொண்டு இருந்தார்கள். யார் அந்த நபர் என்பது ஒரு புதிராகவே இருந்தது.

ஒருநாள் மடத்து நபர்கள் மறைந்திருந்து வில்வம் கொண்டுவரும் நபரைப் பிடித்துவிட்டார்கள். அவன் பன்னிரெண்டு வயது பொருந்திய, ஜமீனில் மாடு மேய்க்கும் சிறுவன். அவன் பெயர் புரந்தரகேசவலு. அவனை மஹாஸ்வாமிகளிடம் அழைத்துச் சென்றார்கள். மஹாஸ்வாமிகள் அவனைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து, ''புரந்தரகேசவலு! உனக்கு என்ன வேண்டும்? கேள்!'' என்றார்கள்.

அந்த சிறுவன், ''சாமி! எனக்கு இரண்டே இரண்டு ஆசைகள்தான். ஒன்றை இப்பொழுது சொல்கின்றேன், மற்றொன்றை நீங்கள் ஊருக்கு கிளம்பும் தினத்தன்று சொல்கின்றேன்'' என்று கூறினான். முதல் ஆசையாக, தனது தந்தையார் கற்றுத் தந்த தியாகராஜ கீர்த்தனைகளையும் புரந்தரதாஸர் கீர்த்தனைகளையும் மஹாஸ்வாமிகள் முன் பாட வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, தினமும் மதியவேளையில் ஸ்ரீ மஹாஸ்வாமிகளே அமர்ந்து அவனைப் பாடச் சொல்லி கேட்டு மகிழ்ந்தார்.

21 நாட்கள் கழித்து, மஹாஸ்வாமிகள் அந்த கிராமத்தை விட்டு கிளம்பும்பொழுது, அழுதுகொண்டிருந்த புரந்தரகேசவலுவிடம் மஹாஸ்வாமிகள், ''நீ என்னிடம் ஊருக்கு கிளம்பும்பொழுது இரண்டாவது ஆசையை சொல்கிறேன் என்றாயே, அது என்னப்பா?'' என்று வினவ, அந்த படிப்பறிவில்லாத, மாடு மேய்க்கும் அந்த ஏழை சிறுவனின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு மஹாஸ்வாமிகளின் கண்களில் கண்ணீர் மல்கியது.

தனது தகப்பனார், மகான்களைக் கண்டால் அவர்களிடம் மோக்ஷம் வேண்டுமென்று கேட்டு பெற்றுக்கொள் என்று தன்னிடம் சொன்னதாகவும், தனக்கு மோக்ஷத்தை மஹாபெரியவர்தான் பெற்றுத் தரவேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான். மஹாபெரியவர் அதற்கு, ''கவலைப்படாதே, உரிய காலத்தில் உனக்கு மோக்ஷத்தை பகவான் அருள்வார்'' என்று ஆசீர்வதித்து விட்டு, ஜமீன்தாரிடம் புரந்தரகேசவலு விஷயமாக எந்த தகவல் இருந்தாலும் மடத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு கிளம்பினார்.

பல வருடங்களுக்குப் பின், பக்தர்களுடன் இருந்த மஹாஸ்வாமிகள் திடீரென்று எழுந்து சென்று காமாக்ஷியம்மன் கோவில் புஷ்கரணியில் ஏழெட்டு முறை ஸ்நானம் செய்து ஜபம் செய்தார்கள். அப்பொழுது மடத்திற்கு புரந்தரகேசவலு 'சீரியஸ்' என்று தந்தி வந்தது. 'அதை எடுத்துக்கொண்டு பெரியவரிடம் வரும்பொழுதே, பெரியவர், புரந்தரகேசவலு காலகதி அடைந்துவிட்டதாகவும், அவன் மோக்ஷம் அடைய 6 பிறவிகள் எடுக்கவேண்டியிருந்ததால், தானே அவன் மோக்ஷம் அடைவதற்காக 6 முறை ஸ்நானம் செய்து ஜபம் செய்ததாகவும் கூறினார்கள்.'

இதுபோன்று, மஹாஸ்வாமிகளின் ஸன்னதியில் நடைபெற்ற பல இனிய வியக்கத்தக்க சம்பவங்களின் ஒரு அரிய தொகுப்புதான் ஸ்ரீ ரமணி அண்ணா அவர்கள் எழுதி விகடன் பிரசுரம் வெளியிட்டுள்ள 'மகாபெரியவர்' என்ற அற்புதமான நூல்.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-21

- குடந்தை என். ராமசர்மா

ஸ்ரீ சாங்கர ரஸம் நெஞ்சில் என்றும் தங்கும் போதத்தின் நாதரஸம். பொங்கிவரும் மங்களரஸம். *'ரஸோவை ஸ:'* என்றிருக்கும் பரமாத்ம தத்துவத்தைப் பாங்காகக் கையில் பிடித்துத்தரும் வேதாந்த ரஸம். உலகின் விபரீதச் சிந்தனை, விபரீத செயல் இவைகளிலிருந்து மனிதனை விடுவிப்பதே நம் முன்னோர்களான ரிஷிகளின் நோக்கம். இந்த நோக்கத்தை உள்ளபடி கண்டவர் ஸ்ரீ சங்கரர். பண்டு விபரீதப் போக்கு மறையும்வண்ணம் கண்டு சொன்னவர். 'வண்டுபடி துளப மார்பனின்' வாக்கிற்குப் பிறழாமல் பொருள் சொன்ன ஞான வித்தகர்.

இனிப்புப் பண்டம் முழுவதும் பரந்து நிற்கும் இனிமைபோல் கண்ணன் வாக்கிற்கு வண்ணமிகு உரை எழுதிய இவரது வாக்கிலும் ஞான வீச்சிலும் பக்திச்சுவை விரவி நிற்கக் காணலாம். 'ஞாநாதேவது கைவல்யம்', ஞானம் ஒன்றினாலேயே மோக்ஷம் சித்திக்கும் என்று ஞானவேசத்தில் வலியுறுத்துகிறார். அதேசமயம், கர்மானுஷ்டானத்தி லிருந்து நழுவியவனை ''ப்ரஹ்ம பந்து'' என்று இகழ்வதிலும் வேகம் அதிகமே! ஞானக்குரவரின் குரலைக் கேளுங்களேன்.

*'யஸ்மாத் மதநீநம் கர்மிணாம் கர்மபலம், ஞானிநாம்*
*சஞானபலம், அத:, பக்தியோகேந மாம் யே*
*ஸேவந்தே, தே மம ப்ரஸாதாத் ஞானப்ராப்தி*
*க்ரமேண குணாதீதா: மோக்ஷம் கச்சந்தி, கிமுவக்தவ்யம்*
*ஆத்மா: தத்வமேவ ஸம்யக் விஜாநந்த: இதி ॥''*

*(அத். 15 உபோத்காதம்)*

கண்ணன் கூற்று வேறு இவர் கூற்று வேறா என்ன? ***ஞாநீது ஆத்மைவ மே மதம்*** என்றானில்லையோ கண்ணன்! ஞானியும் இவனும் வேறில்லையே!

'அர்ஜுனா! கர்மம் செய்பவர்களின் கர்ம பலனும், தொடர்ந்த முயற்சியால் தோன்றும் ஞானிகளின் ஞான பலனும் என்னைச் சார்ந்தே இருக்கின்றன. எனவே, எவர்கள் என்னை பக்தி யோகத்தால் வழிபடுகின்றனரோ, அவர்கள் என் அருளால் ஞானம் பெற்று முறையே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூவகைக் குணங்களையும் கடந்தவராகின்றனர். முக்தியும் அடைகின்றனர். ஆத்ம தத்துவத்தை உள்ளபடி உணர்ந்தவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!' என்று கண்ணன் கூறுகிறானாம்.

'கர்மம், பக்தி, ஞானம் மூன்றும் கண்ணனையே சார்ந்திருக்கின்றன. பக்தியோ அவனது புல்லாங்குழல் போன்று அவனுக்கு மிக அருகில் அவனோடு ஒன்றாகி, உடனாகி இருக்கின்றது. பெரிய இடத்தைப் பிடித்துவிட்டால், அதனுடன் இணைந்துவிட்டால் பிறகு பயமில்லை, பயன் பற்றிய எதிர்பார்ப்பும் இல்லை. எப்போதும் சுகமே!' என்பது மஹனீயர்களின் வாக்கு. 'கண்ணன் கைக் குழலாவோமே' என்பது மோனக்குரவர் சங்கரரின் ஞான வாக்கு.

**... வளரும்**

---


ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

-ராதே க்ருஷ்ணா-

# பாலகர்களுக்கு ஒரு கதை - 109

ஒரு ஊரில், ஒருவர் புராண சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டு இருந்தார். திரளான மக்கள் கூடியிருந்து கேட்டுக்கொண்டு இருந்தனர். அதில் கோவிந்தன் என்ற பக்தனும் இருந்தான். அவனுக்கு நல்ல குணமும், தெய்வ நம்பிக்கையும் உண்டு. அன்றைய தினம் சொற்பொழிவாற்றியவர், காசி நகரத்தின் பெருமையைப் பற்றிப் பேசினார். காசிக்குச் சென்று கங்கையில் குளிப்பது எத்தகைய புண்ணியம் தரக்கூடியது என்றும், அங்கு மரிப்பவருக்கு பரமேஸ்வரனே 'ராம' நாமம் உபதேசித்து மோக்ஷம் தருவது குறித்தும், மேலும், அந்த க்ஷேத்ர ஸ்வாமியான பிந்துமாதவர் பற்றியும், அன்னபூரணி, விசுவநாதர், காலபைரவர் ஆகிய தெய்வங்களின் மகிமை பற்றியும், புண்ய நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் பற்றியும் மிகவும் விரிவாகவும், மனதில் படும்படியும் அன்று எடுத்துரைத்தார் அந்த பௌராணிகர்.

அதைக் கேட்டுக்கொண்டு இருந்த கோவிந்தனுக்கு, காசியும் கங்கையும் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது. இந்துவாக இருக்கும் அனைவரும் வாழ்வில் ஒருமுறையாவது காசிக்குச் சென்று கங்கா ஸ்நானம் செய்யவேண்டும் என்று அந்த பௌராணிகர் சொன்னதால், அவன் காசிக்கு சென்று வருவதென முடிவெடுத்தான்.

காசிக்கு செல்வதென்றால் நல்ல யாத்ரீகர்களுடன் சென்றால் தான் பல புண்ய தலங்களை நன்கு தரிசிக்க முடியும் என்பதை பலரின் வாயிலாகக் கேட்டு அறிந்திருந்த கோவிந்தன், இதற்கு முன் காசிக்குச் சென்று வந்தவர்களிடம், அங்கு சென்று வருவது பற்றி விசாரித்தான். அந்த ஊரிலேயே ஒருவர், நியாயமான கட்டணத்தில் காசிக்கு அழைத்துச் சென்று வருகிறார் என்று அவர்களிடம் பேசிய பின் அறிந்தான்.

அதன்படி அந்த நபரைச் சந்தித்து, தனது விருப்பத்தைத் தெரிவித்தான். அவரும் ஒரு தொகையை கூறி, அதைக் கொண்டு வந்தால், காசிக்கு அழைத்துச் செல்வதாக உறுதி அளித்தார்.

காசிக்குச் செல்லப் போகின்றோம் எனும் எண்ணமே கோவிந்தனை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. இரவு, பகலாக எந்நேரமும் அந்த சிந்தனையிலேயே மூழ்கி இருந்தான். எப்பொழுது காசிக்குச் செல்வோம், கங்கையில் குளிப்போம், விசுவநாதரை தரிசிப்போம், அன்னபூரணியை தரிசிப்போம் என்று எண்ணியபடியே இருந்தான்.

தினமும், ஒரு சிறு தொகையை சேமித்து வந்தான். இரண்டாண்டு காலம் உருண்டோடியது. ஒருநாள், அவனுக்கு காசி யாத்திரைக்குத் தேவையான பணம் சேர்ந்துவிட்டது. மறுநாள் காலையிலேயே யாத்திரை அழைத்துசெல்லும் அந்த நபரைப் பார்த்து, தனதுப் பெயரை பதிவு செய்துவிட்டான். நாளும் குறித்தாகிவிட்டது. அவனுடன் பல அன்பர்கள் வருவதாக இருந்தனர்.

மறுநாளிலிருந்து அனைவரிடமும் இதே பேச்சுதான் கோவிந்தனுக்கு. இருக்காதே பின்னே! வாழ்நாள் கனவு பலிக்கப் போகிறது அல்லவா! அனைவரையும் பார்த்து சொல்லி வந்த அவன், ஒரு தூரத்து உறவினரையும் பார்த்துச் சொல்லி வரப் பக்கத்து ஊருக்குச் சென்றான். மிகுந்த குதூகலத்துடன் சென்றான்.

கோவிந்தன் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் பார்க்கச் சென்ற உறவினரோ ஏழை. அவருக்கு 4 பெண்கள். இருவர் திருமண வயதை எட்டி இருந்தனர். இருவர் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்தனர். குடும்ப தலைவருக்குச் சொற்ப வருமானமே. ஆதலால், வீடு வறுமையில் இருந்தது. பழங்கால வீட்டிலே இருந்த அவர்கள், கிழிந்த உடைகளைத் தைத்து, அவற்றையே ஆடையாக அணிந்து இருந்தனர் அந்த குடும்பத்தினர்.

கோவிந்தனை வரவேற்றார் அந்த உறவினர். அவன் அமர ஒரு பழைய முக்காலியை எடுத்துப் போட்டார். அன்பாக பேசிய அவர், தனது குடும்ப வறுமையைப் பற்றியும், தன் பெண்களை

எப்படித் திருமணம் செய்து கொடுப்பது என செய்வதறியாமல் தவிப்பது பற்றியும் கோவிந்தனிடம் சொன்னார். அதைக்கேட்ட கோவிந்தனுக்குக் கண்களில் நீர் தளும்பியது. பக்தனுக்கு இரக்க குணம் அதிகம் இருக்கும் அல்லவா!

வீடு திரும்பியபின், கோவிந்தன் தனது உறவினரை பற்றியே சிந்தித்துக்கொண்டு இருந்தான். காசி யாத்திரையை மறந்துவிட்டான். ''அடடா! என்ன ஒரு கஷ்டம்! அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்'' என எண்ணினான். தான் காசிக்குச் செல்ல வைத்திருந்த தொகையை கொடுக்கலாமெனில் அதுவோ அவரது கஷ்டத்திற்கு முன் ஒரு சிறு தொகைதான். இருப்பினும், ஒரு முடிவுக்கு வந்தான், நேராக மறுபடியும் தனது உறவினர் வீடு தேடிச்சென்று, தான் காசிக்குச் செல்ல வைத்திருந்த பணத்தை அவரிடம் கொடுத்தான்.

அவன் மனதில், ''நாம் கொடுப்பது சிறிய தொகை. எனினும், என்னால் இன்று இதைத்தான் செய்ய முடியும். மேற்கொண்டு இறைவன் பார்த்துக்கொள்வார்'' என்று நினைத்தான். மேலும், உளமார இறைவனிடம் தனது உறவினர்க்கு வேண்டிய தேவைகளை அளிக்குமாறு பிரார்த்தித்துக்கொண்டான்.

காசிக்கு அம்முறை கோவிந்தன் செல்லவில்லை. அதனால் என்ன? இறைவனின் கடைக்கண் பார்வை அவன் மீது விழுந்து விட்டதே! எப்படி? அம்முறை காசிக்குச் சென்று வந்தவர்கள் எல்லோரும் கோவிந்தனிடம், ''கோவிந்தா! நீயும் காசிக்கு வந்திருந்தாயே!... எங்களுடன் குளித்தாயே! எப்படி வந்தாய்?... ஆயின் போகும் பொழுதும், வரும்பொழுதும் எங்களுடன் நீ வரவில்லையே'' என்றனர். கோவிந்தன் புரிந்துகொண்டான், 'இது இறைவனின் அருள் என்று.'

நல்ல குணமும், பக்திமானாகவும் இருந்த கோவிந்தனின் இரக்க குணம் அவனுக்கு, அவன் காசிக்குச் செல்லாமலேயே, அந்தப் பலனைப் பெற்று தந்துவிட்டது. உண்மையான பக்தர்களின் உள்ளத்தில் என்றும் குடியிருப்பான் இறைவன்! அப்படித்தானே! அன்பிற்கு இறைவன் எத்துணை சுலபம் என்று பாருங்கள்!

# மாலே மணிவண்ணா - 52

**- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

அடுத்த திருநாமமும், 'தோல்வியைத் தழுவாத சபையினை உடையவன்' என்று பகவானது புலமை நலத்தால் ஆகிய சிறப்பினைக் கருதி வருகிறது. 'தோலாக் கோட்ட' என்று பகவானை அழைக்கிறார். (தோலா-தோல்வியடையாத, கோட்ட-சபையை உடையவனே என்பது இதன் பொருள்.) கோட்டி என்றால் சபை (அவை) புலமை மிக்கார் கூடும் இடம். அத்தகைய அவையை உடையவனை, கோட்டியை உடையவன் என்னும் பொருளில் 'கோட்ட' என்று அழைக்கிறார்.

*''பாட்டும் கோட்டியும் அறியாப் பயம்இல்*
*தேக்குமரம்போல் நீடிய ஒருவன்''*

என்னும் பழம்பாடலில் கோட்டி என்பது அவையில் பேசுதல் என்னும் பொருளில் வருவதும்

*''அரங்கு இன்றி விட்டு ஆடியற்றே நிரம்பிய*
*நூல் இன்றிக் கோட்டி கொளல்''* (குறள் 401.)

என்னும் திருக்குறளில் 'கோட்டி கொளல்' என்பதற்கு 'அவையின் கண் ஒன்றனைச் சொல்லுதல்' என்று பரிமேலழகர் உரை வகுத்திருப்பதும் இங்கு நினைத்தற்குரியது. அவை முதல்வராக இருப்பவர் பெருமான் என்பதும், அவர் அவை தோல்வியடையாத பேரவை என்பதும் ஆழ்வார்கள் வைபவத்தாலும் இதிகாசங்களாலும் நன்கு அறியப்பட்டிருக்கும்.

இனி 'தோலாக் கோட்ட' என்னும் இத்தோத்திரத்துக்கு வேறு ஒரு பொருளும் பொருந்துவதாகும். கோடு என்பது சங்கு என்றும் பொருள்படும். கோட்ட என்றால் சங்கை உடையவனே! என்று அழைப்பதாகக் கொள்க. திருமாலின் இடப்பக்கத்துத்திருக்கையிலே என்றும் எழுந்தருளியிருக்கும் பாஞ்ஜசன்யம் என்கின்ற சங்கு தோல்வி என்பதை அறியாதது. 'தோல்வியடையாத சங்கை உடையவனே' என்று தோத்திரம் செய்கிறார். சங்கிற்குத் தோல்வியில்லாமையாவது வெற்றி முழக்கத்தையே எப்பொழுதும் செய்யும் வண்ணமாக இருத்தலாம். 'அடியார் படுதுயர் ஆயின வெல்லாம் நிலம்தரம் செய்யும்' பெருமான் திருக்கரத்தை அலங்கரிக்கும் சங்கு வெற்றி முழக்கத்தைச் செய்வது வியப்பில்லை அல்லவா?

சங்கம் என்பது ஒரு படை அல்ல, படைகளால் பெற்ற வெற்றியை அனைவரும் அறிந்துகொள்ள முழக்கம் இடும் வாத்தியம்தான். ஆனால் பகவானது திருக்கரத்தே உள்ள சங்கு அப்படிப்பட்டதல்ல; வெற்றியைத் தருவதும் அதுவே. வெற்றிக்குப் பின் முழங்குவதும் அதுவே. முழங்கும்போதே எதிரிகளின் படைகளை அழித்து வெற்றியையும் செய்யும் ஆற்றலை உடையது.

அழகர் கிள்ளை விடு தூது என்னும் திருமாலிருஞ்சோலை மலைப் பிரபந்தத்தில் பெருமான் திருக்கரத்தில் உள்ள சங்கைப் பற்றி அற்புதமாகச் சொல்லப்பெற்றுள்ளது.

*''மாநகரப்*
*பேர் இருள் நீக்கப் - பெருந்தவம் வேண்டா உடலில்*
*ஆருயிர் கூட்ட அயன் வேண்டா - பாரும் எனச்*
*சங்கத் தொனியும் தடங்குழல் ஓசை எனும்*
*துங்கத் தொனியும் தொனிப்பிப்போன்'' (83-84)*

தன் அடியார்க்கு நரகமாகிய பேரிருள் வாராதபடி அழிக்கும் ஆற்றல் உடையது, சங்கின் முழக்கொலி. சங்கொலி கேட்ட அளவிலேயே நரகத்தின் வாயில் அடைபடும் ஆதலால், நரகம் புகாமல் இருப்பதற்குப் பெரிய தவங்களைச் செய்ய வேண்டாம் என்கிறார். அழிக்கும் ஆற்றலில் சிறந்தது சங்கொலி. அதுபோலவே, பகவானது குழல் ஒலி ஆக்கும் ஆற்றலில் சிறந்தது. கோவிந்தன் குழல் கொடு ஊதினபோது பட்ட மரங்கள் தளிர்த்தன அன்றோ? உடலில் உயிரைக் கூட்டப் பிரமன் வேண்டவே குழல் ஒலியே அதைச் செய்துவிடும் என்கிறது கிள்ளை விடு தூது.

பகவானுடைய சங்கைத் தோத்திரம் செய்து, அந்த ஒலி கேட்டாலே நரகம் தொலைந்துபோகும் என்கிறபோது 'தோல்வி காணாத சங்கை உடையவன்' என்று பகவானைத் தோத்தரிப்பது சிறந்து நிற்கிறது.

இன்னொரு வகையிலும் இதை விளக்கலாம். பாரதப் போரில் படைத் துணையாகப் பகவானை அழைக்க வருகிறான் துரியோதனன். முன்னதாக வந்தவன் பகவானின் தலைப்பக்கமாக அமர்கிறான். பின்னால் வந்த அருச்சுனன் பகவானின் திருவடிப் பக்கம் அமர்கிறான். துயில்வார்போல் படுத்திருந்த பகவான் எழுந்த அளவிலே முதலில் தன் திருவடிப் புறத்தே அருச்சுனனைக் காண்கிறார். பிறகு, துரியோதனனைக் காண்கிறார். முதலில் பார்த்த அருச்சுனனுக்குத் தன்னையே படைத்துணையாக வழங்குகிறார். பின்னர், துரியோதனனுக்குத் தன்னுடைய யாதவகுல சேனைகள்

அனைத்தையும் தருகிறார். 'போரில் படையெடுத்துப் போர் செய்யேன், என்ற உறுதியையும் துரியோதனனுக்கு வழங்குகிறார். துரியோதனன் பெருமகிழ்ச்சியோடு செல்கிறான். பஞ்சவர்க்குத் துணையாகப் படை எடேன் என்று சொன்ன பகவான் பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து தேரை ஓட்டுகிறார். போரில் பகைவர்கள் பாண்டவர்களால் வீழும்போது அந்த வெற்றியைக் கொண்டாடுகிற முறையிலேதான் சங்கை எடுத்து முழங்குகிறார். சங்கொலி கேட்ட அளவிலே துரியோதனனின் கணக்கிறந்த அக்குரோணி சேனைகள் அடியோடு அழிந்து போகின்றன. சங்கமுழக்கொலியாலே துரியோதனனது கணக்கற்ற சேனைகளை அழித்துப் பூபாரம் தீர்க்கிறான் புயல்வண்ணன்.

பாரதப் போரின் வெற்றிக்குப் பெரிதும் காரணம் பாண்டவரின் போராற்றலுக்கும் மேலாகக் கண்ணன் எம்பெருமானது சங்கொலியாகும். சங்கு என்பது ஒரு படை அல்ல. ஆதலின், துரியோதனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறியதாக ஆகாது. பாண்டவர்களால் கௌரவ சேனையின் சிறுபகுதியே அழிந்தது. முற்றவும் அழித்தது எம்பெருமானது சங்கொலி. இக்கருத்தை வைத்து நாட்டு மக்களிடத்தே ஒரு பழமொழியும் வழங்குகிறது. அந்தப் பழமொழியையும் நாம் சிதைத்துப் பொருள் செய்து விட்டோம்.

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி'' என்னும் பழமொழி யாரோ சாமியார் வெறுமே இருந்த சங்கை ஊதிக் கெடுத்துவிட்டார் என்பது போலப் பொருள்படுகிறது; உலகியற் செய்திகளுக்கு உவமையாகச் சொல்லப் பெறுகிறது. அந்தப் பழமொழியின் வடிவம் வேறு. பாரதப் போரைக் கருதி எழுந்த பழமொழி அது. ஒரு பெண்ணை நோக்கிச் சொல்வதுபோல் அமைந்தது.

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தாண்டி'' என்று படிக்க வேண்டும். கண்ணன் தன் இடக்கையில் ஒரு வேலையும் இல்லாமல் சும்மா இருந்த சங்கைப் பாரதப் போரில் அடிக்கடி ஊதி துரியோதனன் சேனைகளை எல்லாம் கெடுத்துவிட்டானம்மா என்று ஒரு பெண்ணிடம் சொல்வதுபோல் ஆகும். எம்பெருமான் சங்கு முழங்கினாலே, தீயவை அனைத்தும் கெடும் என்பதைச் சொல்லிக் காட்டுகிற மிகச் சிறந்த நுண்பொருள் உடையது அப்பழமொழி.

எனவே, 'தோல்வி என்பதையே அறியாத சங்கினை உடையவனே' என்று இத்தோத்திரத்துக்குப் பொருள் செய்வதும் பொருந்துவதே!

**(தொடரும்)**

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

நித்யானந்தாஸ் பாபாஜி, 1890-இல் ஒரிஸாவிலுள்ள தார்கோட் நகரின் மன்னருக்குப் பிறந்தார். நித்யானந்தர் வளர்ந்து வரும் காலத்தில், பரிக்ரேட் நகரின் மன்னன் இவரை தத்தெடுத்து தனது நகருக்கு முடிசூட்ட விரும்பினான். ஆனால், நித்யானந்தரோ உயர்ந்த பக்தி லட்சணங்களுடன் இருந்தமையால் கடவுளின் சித்தம் அவரை பக்தி ஸாம்ராஜ்யத்திற்கு சக்ரவர்த்தியாக நியமிக்கவிருந்தது. அவ்வாறு தத்தெடுக்கும் சடங்கு நடைபெறும் முன்னரே, நித்யானந்தர் வீட்டை விட்டுத் தப்பித்து, ஜகன்னாதபுரியைத் தாண்டியுள்ள அலால்நாத் எனும் இடத்திற்குச் சென்றுவிட்டார். அங்கு, ஒரு பாறை எட்டடி அளவில் உள்ளது. அதில், ஸ்ரீ மஹாப்ரபு நமஸ்கரித்திருந்தபடியால் மஹாப்ரபுவின் ஒவ்வொரு அங்கமும் அதில் நன்கு படிந்துள்ளது, அதை இன்றும் காணலாம். அந்தப் பாறையை கண்டவுடன், நித்யானந்தரின் மனம் பிரேமையால் உருக, அவர் மூர்ச்சையடைந்தார்.

அலால்நாத்திலிருந்து அவர் ஜகன்னாதபுரி, நவத்வீபம் வழியாக பிருந்தாவனம் வந்தடைந்தார். அங்கு, மஹாப்ரபுவின் மிக நெருங்கிய சீடரான கதாதரரின் பரம்பரையைச் சேர்ந்த மதுசூதன கோஸ்வாமியிடமிருந்து மந்திர தீக்ஷையும், ச்யாம்சரண் பாபாவிடமிருந்து சந்யாச தீக்ஷையும் பெற்றார்.

இப்படி, ஒரு இளம் சந்யாசியாக அவர் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மரத்தடியில் இருந்துகொண்டு, மதுகரியில் வரும் பிக்ஷையை உண்டு, அனவரதமும் நாமம் சொல்லிக்கொண்டு வாழ்ந்து வந்தார். ஒருநாள் முழுவதிலும் இரண்டு அல்லது மூன்று மணி நேரமே உறங்குவார். ஒருமுறை, இரவு-பகலாக மூன்று நாட்கள் தொடர்ந்து நாமசங்கீர்த்தனம் செய்தார்.

பலவருடங்கள் ஊர்ஊராக சென்று ஏகாந்த சன்யாசியாக இருந்து, பின்னர் நந்தகிராமத்தில் நிலையாக வசிக்கலானார். இங்கு,

''ஹரே ராம'' மஹாமந்திரத்தை விடாமல் ஜபம் செய்து, சித்தி பெற்றார். இவரிடம் பல சாதகர்கள், இல்லறத்தினர்கள் சரண் புகுந்தார்கள். பக்த சாம்ராஜ்யத்தின் மன்னராக இவரை நியமிக்க எண்ணிய பகவான், பல லீலைகள் செய்து இவரிடம் சிஷ்யர்களைச் சேர்த்து வைத்தான். அப்படி ஒரு லீலையைக் காண்போமா!

ஒரு இளைஞன், எல்லாவற்றையும் துறந்து, ஜகன்னாத புரியிலுள்ள பகவான் முன் நின்றுகொண்டு, ''ஹே பிரபோ! ஒரு சத்குருவைச் சரணடைந்து, பஜனை செய்து, உனது திருவடிகளை அடையவே நான் எல்லாவற்றையும் துறந்தேன்! ஹே தீனதயாளா! உலகப் பற்றற்ற இந்த தீனன் மேல் கருணை புரியமாட்டாயா? பிரபோ! கருணாசாகரனல்லவா நீ'' என பலவாறு உருகி பிரார்த்தனை செய்துக்கொண்டிருந்தான். அப்பொழுது, கருவறையில் உள்ள விக்ரஹங்கள், பலராமன் மற்றும் சுபத்ராவினுடைய முகங்கள் மறைந்து கண்ணனுடைய அழும் முகம் மட்டுமே அவனுக்குத் தெரிந்தது.

'நீ என்னையடைய வேண்டும் என்றுதான் நானும் துடிக்கின்றேன்' என்ற பகவானுடைய ஹ்ருதயத்தை புரிந்துகொள்ளாத அவன், தாம் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டோம் என்று எண்ணி, அங்கிருந்து விமிலாதேவியின் கோயிலுக்குச் சென்று அங்கேயும் இவ்வாறே பிரார்த்தனை செய்து அழுதான். விமிலாதேவியும் தன் அருள் அவனுக்கு உண்டு என்பதை கையை அசைத்து அவனிடம் தெரிவித்தாள். இதுவும் அவனுக்குப் புரியவில்லை.

பிறகு, குருவைத் தேடி ஊர்ஊராகப் போகும்போது, அவன் நவத்வீபம் சென்றடைந்தான். அங்கு ஒரு நாள், மஹாப்ரபுவை தரிசனம் செய்துகொண்டிருந்தபோது, தனக்கு குருவை காட்டி அருளுமாறு பிரார்த்தித்தான். அப்பொழுது, அவன் ஒரு அதிசயத்தைக் கண்டான். மஹாப்ரபுவிற்குப் பதிலாக முதலில் அங்கு ராதா-க்ருஷ்ணனையும் பின்பு நீல நிறத்தில் ஒரு சகியையும் கண்டான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மஹாப்ரபுவின் ஆக்ஞையை மனதில் உணர்ந்து அவன் அங்கிருந்து பிருந்தாவனம் புறப்பட்டான்.

பிருந்தாவனத்தில், இரயில்நிலையத்திலேயே அவன் நித்யானந்த தாஸ்பாபாஜியைக் கண்டான். ஜகன்னாதபுரியில் ஏற்கெனவே

பார்த்திருந்தபடியால் நித்யானந்தரும் அவனை தன்னுடன் நந்தகிராமத்திற்கு அழைத்துச் சென்றார். அவ்விளைஞனும் அவரையே தன் குரு என்று புரிந்துகொண்டு அவருடன் வசிக்கலானான். அவரிடமே மந்த்ர தீக்ஷையும் பெற்று நிம்மதி யடைந்தான்.

ஒருநாள், தியானம் செய்வதற்காக, குருநாதரிடம், அவரின் ஒரு புகைப்படத்தை அவன் வேண்டினான். அதற்காக புகைப்படம் எடுக்கும் கலைஞரும் வந்தார். கேமராவை சரியாக வைத்து புகைப்படம் எடுக்கும் முன், நித்யானந்தர் அவனிடம், ''கேமரா என்னை நோக்கி சரியாக வைக்கப்பட்டுள்ளதா என்று பார்'' என்று கூறினார். அவனும் அவ்வாறே புகைப்படகாரரின் அனுமதியுடன் பார்க்க முற்பட்டபோது, கறுப்பு திரையின் பின்புறத்திலிருந்து அவனுக்கு அங்கு குருதேவருக்கு பதிலாக, முன்பு கண்ட அந்த நீல நிற சகியே தெரிந்தாள். திரையை விலக்கினாலோ குருதேவர்தான் இருந்தார். இச்சம்பவத்திலிருந்து தனது குருவை ராதாராணியினுடைய சகியாக அவன் அறிந்துகொண்டான். இதிலிருந்து தனது குரு, ராதா-க்ருஷ்ணர், கௌராங்கர், எல்லோரும் ஒருவரே என்பதையும் அவன் உணர்ந்துகொண்டான்.

இப்படி பலர் நித்யானந்ததாஸ் பாபாஜியிடம் சிஷ்யர்களாக வந்து சேர்ந்தனர். ஒரு பெரிய ஆன்மீக ஸாம்ராஜ்யமே அங்கு உண்டாயிற்று!

**(தொடரும்)**

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ ப்ரேமிக வரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில் மே மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 135

*நின்னெரி யெரித்தெனை நீறாக்கிடுமுன்*
*நின்னருண் மழைபொழி அருணாசலா* - *(தொடர்ச்சி)*

ஆசனம் பல மணி நேரம் போட்டுப் பழகுவதற்கு ஏதோ ஒரு குறிப்பிட்ட ஆசனத்தை மட்டுமே போட்டுப் பழக வேண்டும் என்ற அவசியம் இல்லை. ராஜயோகம் பழகுபவர்களுக்கு ஹடயோகத்தில் குறிப்பிட்டுள்ள ஆசனங்களில் ஒன்றைப் பழகி சித்திப் பெற்றுக் கொள்வது அனுகூலமாக இருக்கும். மற்ற சாதனா மார்க்கங்களை பயில்பவர்களுக்கு சுகமாக இருக்கக்கூடிய எந்தவொரு ஆசனமும், அதில் ஏற்படக்கூடிய சித்தியும் போதுமானது.

அஷ்டாங்க யோகமான ராஜயோகத்தைப் பழகுபவர்கள் மூச்சுப் பயிற்சி என்னும் பிராணாயாமத்தை பயில்வதற்கு முன்னம் ஆசன சித்தி பெறவேண்டும். பல மணிநேரம் ஒரே ஆசனத்தில் உட்கார்ந்தும், உடம்பில் எந்தவொரு வலியோ, சிரமமோ அல்லது சோர்வோ ஏற்படாமல் இருந்து, புத்துணர்வும் பெற முடியுமானால் ஆசனம் சித்தி பெற்றுவிட்டது என்று அர்த்தம்.

இப்படி ஆசன சித்தி ஏற்பட்டதினாலேயே, சரீரம் ஆடாமல், அசையாமல் இருக்கும் தன்மை ஏற்பட்டுவிடுகிறது. இதன் பலனாய் மனதின் சலனம் மிகவும் குறைந்துவிடுகிறது.

பிராணாயாமத்தைப் பழகுபவர்கள் அதை தாமாகவே பழகுவது தவறு. காரணம், தவறாக பிராணாயாமத்தை பழகுவதால் மிகுந்த துன்பம் விளையும். இது எப்படியெனில், ஒரு கத்தியில் தேனைக் குழைத்து, தேனை நாக்கினால் ருசிப்பது போலாகும். சற்று கவனக்குறைவாக இருந்தால், நாக்கை, கத்தி பதம் பார்த்துவிடும்.

எப்படி சரியான மூச்சுப் பயிற்சி மனதை அடக்க உபாயமோ அப்படியே தவறான மூச்சுப் பயிற்சி மனதைப் பேதலிக்க வைத்தும்

விடும். அதனால், பல ரோகங்கள் உடலில் உண்டாகி, கடுமையான ஆபத்தை உண்டாக்கிவிடும்.

சரியான யம, நியமங்களுடனும் (சத்தியம், அகிம்சை, பிரம்மச்சரியம், புலக்கட்டுப்பாடு) ஆசன சித்தியுடனும், ஒரு குருவின் நேரடிப் பார்வையிலும் இந்த மூச்சுப்பயிற்சியை, ராஜயோக சாதனைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த பயிற்சியில் மிகுந்த கவனமும், ஒழுக்கமும் அவசியம்.

பிராணாயாமத்தில் பலவிதம் உண்டு. சாதாரணமாகச் செய்யக் கூடிய பிராணாயாமம் ஆனது மூச்சை உள்ளே இழுத்து, வெளியே விடுவது ஆகும். இதற்கு பூரகம், ரேசகம் என்று பெயர்.

ஒரு நாசி வழியே மூச்சை இழுத்து, மறு நாசி வழியே வெளியே விட வேண்டும். மறுபடி எந்த நாசி வழியே மூச்சை விட்டோமோ அதன் வழியே உள்ளே மூச்சை இழுத்து மறு நாசி வழியே வெளியே விட வேண்டும். இது சாதாரண பிராணாயாமம். இதற்கு நாடி சுத்தி என்று பெயர். ஒரு நாசி வழியே பிராணனை (மூச்சு) இழுக்கும்பொழுதோ அல்லது வெளியே விடும்பொழுதோ மறுநாசியை மூடிக்கொள்ள வேண்டும். இதற்கும் சரியான முத்திரைகள் உள்ளது. அதன்படி செய்தால் இது இலகுவாகவும், எளிதாகவும் இருக்கும். புத்தகத்தில் படித்துவிட்டு இவற்றை பழகுவது கூடாது. ஒரு தேர்ந்த குருவின் நேரடி உபதேசமில்லாமல் இவற்றை பழகுவது ஆபத்தாகிவிடும்.

இப்படி மூச்சை இழுத்து விடுவதற்கு மாத்திரைக் கணக்கு உண்டு. மாத்திரை என்பது ஒரு கால அளவு. அந்த கால அளவுக்கு மீறாமல், மூச்சை உள்ளே இழுக்கவும், வெளியே விடவும் செய்ய வேண்டும். இந்த சாதாரணப் பிராணாயாமத்தின்பொழுது மூச்சை பந்தப்படுத்துவது (அடக்குவது) என்பது கூடாது. காரணம், மூச்சை ஒருவர் அடக்கும்பொழுதுதான் (இதற்கு கும்பகம் என்று பெயர்) பிராணசக்தியானது கிளம்புகிறது.

நேர்த்தியாக ஆசனமும், பிராணாயாமமும் பழகிய பின், கும்பகத்தை ஒருவர் பயிலும்பொழுது, ஆசனவாய்க்கு மேலே, முதுகுத்தண்டுக்கு உள்ளே உள்ள சுழுமுனை எனும் நாடி

மேல்நோக்கி கிளம்புகிறது. இது பிந்து மண்டலத்தில் இருந்து கிளம்பி, ஆவியாக மேல் நோக்கி செல்லும்பொழுது சுழுமுனையில் உள்ள ஆறு முடிச்சுகளும் அவிழ்ந்து, தலையில் சென்று அடிக்கிறது. பின்னர், ஹிருதயத்தில் ஆத்மசாக்ஷாத்காரம் அடையப் பெறுகிறது.

ஆயின், கும்பகப்பயிற்சி இல்லாமலேயே வெறும் நாடி சுத்தியின் மூலம் கூட ஆத்மானுபவத்தைப் பெறுபவர்களும் உண்டு. மிகுந்த பக்குவப்பட்ட சாதகர்களுக்கு, இப்படி அனுபவம் ஏற்படும்.

ஆயின், இது ஒரு நாளிலோ, ஒரு மாதத்திலோ ஏற்படக்கூடிய விஷயமில்லை. 3-4 வருடங்கள் கூட பிடிக்கலாம். மூச்சை, சத்தம் போட்டு இழுப்பது, விடுவது போன்றவை சரியான பயிற்சி அல்ல. அதுபோல், ஆசனத்தில் விறைப்பாகவும் உட்காரலாகாது.

மிகவும் இயல்பாக, புத்துணர்வுடன், சோம்பலின்றி, அஷ்டாங்க யோகத்தை, தகுந்த நியமங்களுடன் தேர்ச்சிப் பெற்ற குருவின் நேரடி பார்வையின் கீழ் பயின்றால் ஆத்மானுபூதி கைகூடும்.

**(தொடரும்)**

ஸ்ரீ ஹரி:

**அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களே!**

**நமது மிஷன் சார்பில் வெளிவரும் மதுரமுரளி தெய்வீக மாத பத்திரிகைக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.**

**நம் மதுரமுரளி, இதழுக்கு இதழ் பொலிவு பெற்று வெற்றிகரமாக 12வது ஆண்டு பூர்த்தியடைவது அனைவரும் அறிந்ததே. இந்த இதழ் தொடர்ந்து வெளிவர, வாசக அன்பர்களாகிய நீங்கள் இதன் வளர்ச்சிக்காக ஆற்றவேண்டிய சிறிய தொண்டு ஒன்று உண்டு. ஆம்! அது, நீங்கள், உங்களின் சந்தாவை காலத்தே தவறாது புதுப்பித்துக் கொள்வதும், மேலும், பல புதிய சந்தாதாரர்களை சேர்க்கும் பணியில் ஈடுபடுவதுதான். இவ்விரண்டுமே மதுரமுரளி 13வது ஆண்டில் தொடர்ந்து பீடுநடை போட உதவும்.**

**தெய்வீகப்பணி தொடர்ந்து நடைபெற உங்களின் ஆதரவை எதிர்நோக்கும்.**

**- ஆசிரியர், மதுரமுரளி**

# செய்திகள்

## ஏப்ரல் 30, மே 1 தேதிகள் - ஸ்ரீ ஸ்வாமிஜியின் சேலம் விஜயம்

ஏப்ரல் 30-ஆம் தேதியன்று மாலையில் சேலம், தெய்வீகம் கல்யாண மண்டபத்தில் சுமார் 1500க்கும் மேற்பட்டவர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகளைக் கேட்டு ஆனந்தித்தார்கள்.

மே 1-ஆம் தேதி மாலையில், தெய்வீகம் கல்யாண மண்டபத்தில், சுமார் 2500 பேர் கலந்துகொண்ட, ''ஹரே ராம...'' நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், நாம மஹிமை பற்றி அருளுரை வழங்கிய பிறகு மஹாமந்திர நாம கீர்த்தனம் செய்தார்கள். கலந்துகொண்ட பக்தர்கள் அனைவரும் ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் மஹாமந்திரகீர்த்தனம் செய்தார்கள். அனைவருக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருக்கரங்களினால் பிரசாதம் வழங்கப்பட்டது.

மே 2-ஆம் தேதி அன்று ''சேலம் நாமத்வார்''-ஐ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் துவக்கி வைத்தார்கள். நாமகீர்த்தன சத்சங்கம் சேலத்தில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

சேலம் திரு. வெங்கட்ராம்-ஷீலா தம்பதியினர் பேராசிரியர் திரு. கருணாகரன், திரு. குமார்-சாந்தி தம்பதியினர், திரு. சகாதேவன் மற்றும் சேலம் கேந்த்ரா பக்தர்கள் சேலம் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்தனர்.

---

ஸ்ரீ ஹரி:

### ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம் - மதுரபுரி

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

- Trustees

### மே 3, 4 -ஆம் தேதிகள் - ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸ்ரீரங்க விஜயம்

திருச்சி, ஸ்ரீரங்கம், திரு. S. ராமச்சந்திரன் அவர்கள் தமது சுயமுயற்சியால் ''ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் - ஸ்ரீரங்கம்'' என்னும் ட்ரஸ்டை ஏற்படுத்தி அதற்கு டிரஸ்டியாக இருந்து வருகின்றார். அதன்மூலம் யஜுர் வேதபாடசாலை ஒன்று நிறுவப்பட்டு ஸ்ரீரங்கத்தில் நடந்துகொண்டு வருகின்றது.

இந்த பாடசாலைக்கு, நமது மதுரபுரி பாடசாலையில் பயின்ற ஸ்ரீ சூரியநாராயணசர்மா அத்யாபகராக இருந்து வருகின்றார். இந்த யஜுர்வேத பாடசாலையின் முதலாமாண்டு பூர்த்தி விழா ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் ஸ்ரீரங்கம், அம்மா மண்டபம், கோனார் சத்திரத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் பல பாகவதோத்தமர்களும் வேத விற்பன்னர்களும் மற்றும் திரளான பக்தர்களும் கலந்துகொண்டனர்.



மே 3-ஆம் தேதி அன்று காலை அஷ்டபதி பஜனையும் ஸ்ரீமத் ராமாயண நவாஹ மூல பாராயணமும், இரவு உபன்யாஸமும் நடைபெற்றன.

இரண்டாம் நாள் 04-5-07 காலை உஞ்சவிருத்தியுடன் நாமகீர்த்தன நகர்வலம் தொடங்கி, அஷ்டபதி பஜனை தொடர்ந்து, பின்பு ராதா கல்யாணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ராதா க்ருஷ்ண யுகளத்தைப் பற்றியும் ராதா

கல்யாண வைபவத்தின் மேன்மைப் பற்றியும் அருளுரை வழங்கினார்கள். திருச்சி கேந்த்ரா அன்பர்கள் இந்த வைபவத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்தனர்.

**மே 5-ஆம் தேதி முதல் 8-ஆம் தேதி வரை**
**ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருவனந்தபுரம் விஜயம்**

திருவனந்தபுரத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தினமும் இரவு 7 மணியளவில் பிரியதர்சனி ஹாலில் அருளுரை வழங்கினார்கள். 700க்கும் மேற்பட்டவர்கள் வந்து தினமும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரையைக் கேட்டு ஆனந்தித்தனர். இதற்கான ஏற்பாடுகளை திருவனந்தபுரம் ஆஸ்திக சமாஜத்தைச் சேர்ந்த திரு. ராமசுப்பிரமணியம், திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருவனந்தபுரம் பக்தர்கள் செய்திருந்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், காலை வேளையில் நடைபெற்ற வீதி பஜனையில் கலந்துகொண்டார்கள். தினமும், நகர்வல நாமகீர்த்தனம் ஸ்ரீ பத்மனாபஸ்வாமி திருக்கோவிலைச் சுற்றி நடைப்பெற்றது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டார்கள். தொடர்ந்து ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக ''ஹரே ராம...'' மஹாமந்திர நாம கீர்த்தனம் நடைபெற்றுவரும் ஸ்வாமி அபேதானந்தா ஆஸ்ரமத்திற்குச் சென்று ஸ்ரீ ஸ்வாமிஜி நாமகீர்த்தனம் செய்தார்கள். நாராயணீயம், ஸ்ரீமத் பாகவதம் பாராயணங்கள் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா கிளை துவக்கப்பட்டது. H.H. Uthradam Thirunal Marthandavarma ராஜ குடும்பத்தின் அழைப்பின் பேரில் ஸ்ரீ ஸ்வாமிஜி Kowdiar Palace விஜயம் செய்தார்கள். H.H. Maharani Lakshmi Bai, Princess Gowri Lakshmi Bai, ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேற்றார்கள்.

**மே 9, 10, 11 தேதிகள் - ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கோயம்புத்தூர் விஜயம்**

கோயம்புத்தூரில் ஆர்.எஸ். புரம், ஸ்ரீ நேரு வித்யாலயா பள்ளி மைதானத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரை மற்றும் 'ஹரே ராம...' நாமகீர்த்தனப் பிரார்த்தனை நடைப்பெற்றது.

தினமும், ஆயிரக்கணக்கானோர் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரைக் கேட்க வந்திருந்தனர். பூர்த்தி தினமான 11-ஆம்

தேதியன்று 3000க்கும் மேற்பட்டோர் மஹாமந்திர நாமகீர்த்தனத்தில் கலந்துகொண்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் சேர்ந்து நாமகீர்த்தனம் செய்தனர்.

கலந்துகொண்ட அனைவருக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருக்கரங்களால் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்த மாபெரும் நாமகீர்த்தனப் பிரார்த்தனைக்கு நமது கோயம்புத்தூர் கேந்த்ராவைச் சேர்ந்த அட்வகேட் திரு. எஸ். கிருஷ்ணன், திரு. ஆர். சேதுராமன், திரு. ஏ.எஸ். சத்தியமூர்த்தி மற்றும் கோயம்புத்தூர் பக்தர்கள் மிகவும் சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

ஸ்ரீ ஸ்வாமிஜியின் பக்தர்களான சென்னை சில்க்ஸ் குடும்பத்தினர் இந்த நாமகீர்த்தன நிகழ்ச்சி கோயம்புத்தூர் முழுவதும் எல்லோரும் அறியும்வண்ணம் Hoardingஐ பல இடங்களில் நிறுவினார்.

ஸ்ரீ நேரு வித்யாலயா டிரஸ்ட், நாமகீர்த்தன நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை வழங்கினர். பல்வேறு நிறுவனங்கள் தத்தம் உதவிகளைச் செய்து மஹாமந்திர பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

### மே 20 முதல் 26 வரை - கோவூர் ''ஹரே ராம...'' மஹாமந்திர நாம ஸப்தாஹம்

சென்னை குன்றத்தூர் அருகேயுள்ள கோவூரில், ஸ்ரீ முரளீதரதாஸ் சத்சங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அகண்ட, ''ஹரே ராம'' 'நாம சப்தாஹம்', 20-05-07 முதல் 26-05-07 வரை கோவூர் அருள்மிகு கருணாகரஸ்வாமி திருக்கோயிலில் வெகுவிமரிசையாக நடந்தேறியது. தினமும், சுமார் 150க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு, 'ஹரே ராம...' மஹா மந்திரத்தை நாமகீர்த்தனம் செய்தனர். தினமும், காலையும் மதியமும் அன்னதானம் நடைபெற்றது.

நிறைவு நாளான 26-05-07 அன்று, மாலையில் நகர சங்கீர்த்தனம் நடைபெற்றது. அன்று இரவு 07.00 மணிக்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் விஜயம் செய்து அருளுரை ஆற்றினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் சுமார் 500 பேர் கலந்துகொண்டு ''ஹரே ராம...'' நாம சங்கீர்த்தனத்துடன் விழா இனிதே நிறைவுற்றது. இதற்கான ஏற்பாடுகளை கோவூர் ஷண்முகம் மற்றும் கோவூர், ஆவடி கேந்த்ராவினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## பெரியகுளம்



ஸ்ரீ வீரம்மாள் கோவில், G. கல்லிப்பட்டி



ஸ்ரீ ராமர் கோவில், நகைக் கடை பஜார், கம்பம்

G. கல்லிப்பட்டி கிராமத்தில் ஸ்ரீ வீரம்மாள் கோயிலில் 16-4-2007 அன்று, ஹரே ராம நாமகீர்த்தனம் துவங்கப்பட்டது. கம்பம் ஸ்ரீ ராமர் சுவாமி கோவிலில் 24-4-2007 ஹரே ராம நாம கீர்த்தனம் துவங்கப்பட்டது.



ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோவிலில் 28-4-2007 அன்று அகண்ட ஹரேராம நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நகர்வல நாமகீர்த்தனம், கௌமாரியம்மன் கோவிலில் புறப்பட்டு பஜார்

மார்க்கெட் வீதி வழியாக ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் சென்று ஏகாதசி பஜனையில் ஹரே ராம நாமகீர்த்தனம் செய்து பின்பு கௌமாரியம்மன் கோவில் வரை நகர்வல நாமகீர்த்தனம் நடைபெற்றது.

ஆற்றில் அழகர் இறங்கும் மண்டகப்படி மேளகாரன் படித்துறையில் ஹரே ராம நாமகீர்த்தனம் (3-5-07) இரவு 7 மணி முதல் 9 மணி வரை நடைபெற்றது. வடுகாநாயுடு திருமண மண்டபத்தில், 5-5-07 அன்று மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை ஹரே ராம நாமகீர்த்தனம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகிலுள்ள விரசக்கன்பட்டி கிராமத்தில் உள்ள பெருமாள் கோவிலில் நாமகீர்த்தனம் நடைபெற்றது.

**தூத்துக்குடி**

நாம முத்து நகரில் மகிழத்தக்க வகையில் மஹாமந்திர நாம சங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

நகர்வல நாமகீர்த்தனம் 14-4-07 அன்று சிவன் கோவிலிருந்து புறப்பட்டு நான்கு வீதி வலம் வந்து பெருமாள் கோவில் வரை வந்தடைந்தது. சுமார் 200க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

மஹாமந்திர நாமகீர்த்தனம், பெருமாள் கோயிலில், ஏப்ரல் 16, 19, 23, 26, 30 தேதிகளிலும், மே 3, 7, 10, 14 தேதிகளிலும் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். குமாரர் தெரு, பஜனை மடத்திலும், பார்வதி அம்மன் கோயிலிலும் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது. சச்சிதானந்த சபையில் கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது.

மே 21-ஆம் தேதியன்று நாமமுத்து நகரின் ஸ்ரீ வைகுண்டபதி பெருமாள் கோவிலில் கொடியேற்றும் வைபவம், தூத்துக்குடி ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கேந்திராவின் பக்தர்களால் நாம சங்கீர்த்தனம் செய்யப்பட்டு, சிறப்புடன் நடைபெற்றது. மேலும், 25-5-07 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் இருந்து வரும் மாலையை வரவேற்கும் வைபவமும், அதனைத் தொடர்ந்து

ஆண்டாள் மாலையுடன் நகர்வல வைபவமும், அன்று காலையில் பெருமாளின் திருக்கல்யாணமும் கேந்திராவின் பக்தர்களால் நாம சங்கீர்த்தனத்துடன் செய்யப்பட்டது.

**சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர் - நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை**

சிவகாசியில், மே 16-ஆம் தேதியன்று, கம்மவார் கல்யாண மண்டபத்தில் மாலை 6 மணியளவில் நாமகீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டது. மாலை 6-15 மணிக்கு 1000க்கும் மேற்பட்டவர்கள் கூடிவிட்டனர்.

சிவகாசி, யோகிராம்சுரத்குமார் பஜன் மண்டலியினர் மாலை 6.15 மணி முதல் 6.30 மணி வரை பஜனை நிகழ்த்தினார்கள். பிறகு திருமதி வாசுகி ஜெயராஜ் அவர்களின் அறிமுகவுரைக்குப் பிறகு நாம மஹிமையைப் பற்றி திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். இரவு 7 மணி முதல் 7.30 மணி வரை சென்னை காமராஜர் அரங்கத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ச்சியின் வீடியோ தொகுப்பு Projector மூலம் Screenல் ஒளிபரப்பப்பட்டது. அதை அனைவரும் பார்த்து, கேட்டு மகிழ்ந்தனர். பிறகு, பக்தர்கள் 7.30 மணி முதல் 8.00 மணி வரை ''ஹரே ராம...'' மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை செய்தார்கள். கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கான சிறப்பான ஏற்பாடுகளை மதுரை திலகவதி ராஜசேகர் அவர்களின் இளைய குமாரர் திரு. R. குமரவேல், திரு. ஜெயராஜ்-வாசுகி தம்பதியினர், திருமதி. உமாசுரேந்திரன் பகவான் யோகிராம்சுரத்குமார் மண்டலியினர், சிவகாசி பக்தர்கள் பலர் உறுதுணையாகயிருந்து சிறப்பாக செய்தனர். சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ராவின் மற்ற கிளைகளிலிருந்தும் பக்தர்கள் கலந்துகொண்டனர்.

சிவகாசி நாமகீர்த்தன நிகழ்ச்சி முடிந்தவுடன் ஸ்ரீவில்லிபுத்தூரில் நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சி நடத்துவதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் பக்தர்கள் விரும்பினர். அதன்படி, மே 18-ஆம் தேதி, ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள்

திருக்கோயில் அருகில் அமைந்துள்ள, செருக்கூர் நாயக்கர் கல்யாண மண்டபத்தில் நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. இதில், சமீபத்தில் கோயமுத்தூரில் நடைபெற்ற நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனையில் ஸ்ரீஸ்வாமிஜி அருளிய அருளுரைகளின் வீடியோ தொகுப்பு ஒளிபரப்பப்பட்டது. இந்த கூட்டுப் பிரார்த்தனையிலும் எண்ணற்றோர் கலந்துகொண்டனர். குரு க்ருபையினாலும் நாம மஹிமையினாலும், தான் இந்த ''ஹரே ராம...'' நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனைகள் சிறப்பாக நடைபெற்றது என்பதை சொல்லவும் வேண்டுமோ!

---

**உங்கள் கவனத்திற்கு...**

- ஒவ்வொரு வியாழக்கிழமைகளில், இரவு 10.10 மணிக்கு சென்னைத் தொலைக்காட்சி-பொதிகையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'ஆத்ம தரிசனம்'** ஒளிப்பரப்பு ஆகும்.
- 'சக்தி விகடன்' ஆன்மீக இதழில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் **'தினம் தினம் திருநாளே!'** என்ற ஆன்மீக தொடர் வெளிவருகிறது.

---

- Sri Sri Muralidhara Swamiji's lecture series in English telecast on Sanskar TV :

  For Local viewers Every Friday & Saturday at 9.00 pm IST starting June 8th 2007.

  International feeds available at 8.00 a.m. IST on every Saturday and Sunday.

  On Internet watch the programs online at: http://www.sanskartv.info/live.htm
- If you have any questions or doubts concerning Spirituality, Mental peace or problems in life or about dharma, please write to us by clicking at : http://www.namadwaar.org/answers/askquestion.php

---

ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

## புதிய வெளியீடுகள்

**நூல்கள் :**

1. ஸனாதனப் புதிர்
2. கலிதர்ம உந்தியார்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ க்ருஷ்ண லீலா | Audio CD |
| 2. | கலிகால உசிதம் தர்மம் - 2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Cassette, Audio CD |
| 3. | மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை-2007 (தமிழில்) | VCD |
| 4. | MahaMantra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கீர்த்தனங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய 'கலிதர்ம உந்தியார்' | Cassette, Audio CD |
| 2. | மஹாமந்திர கீர்த்தனம் -ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 3. | பஞ்ச கீதங்கள் | Cassette, Audio CD |

---

H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) — MP3, Audio CD

---

***Contact :***

Phone : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

---

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writting from the publisher of Madhura Murali.*

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 03-06-07 | : | பெங்களூர் |
| 06-06-07 4 p.m.- 6 p.m | | யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை |
| 11-06-07 | : | ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம் |
| 12-06-07 13-06-07 | | பெங்களூர் |
| 18-06-07 | : | தஞ்சாவூர் |
| 23-06-07 | : | குரோம்பேட்டை |
| 25-06-07 | : | ஆவடி |
| 28-06-07 | : | பெங்களூர் |
| 04-07-07 | : | ஈரோடு |
| 09-07-07 | : | அணைக்கட்டு |
| 15-07-07 | : | கோவை |

### SATSANG PROGRAMMES

| | |
|---|---|
| Satsang by - 04-06-07 to 11-06-07 | Sri M.K. Ramanujam and Sri Suresh<br>Srimad Bhagavatam<br>Sri S. Sridhar, Ideal homes Township<br>Rajarajeswari Nagar, Bangalore-98. |
| 12-06-07 to 19-06-07 | Srimad Bhagavatam<br>Smt. Vijayalakshmi Viswanathan,<br>Lottapollahalli, Bangalore-94. |
| Satsang by - 16-06-07 to 24-06-07 | Ms. Poornima Kumaraswamy<br>Different parts of at Mumbai |

### SATSANG PROGRAMMES AT AUSTRALIA

| | | |
|---|---|---|
| Satsang by | : | Ms. Poornima Kumaraswami<br>Sri M.K. Ramanujam |
| Topics | : | Srimad Bhagavatam,<br>Srimad Ramayanam, Bhakthavijayam and other spiritual Topics |
| From | : | 15-07-2007 to 20-08-2007 |
| Place | : | Sydney |

Visit website http://www.oznamadwaar.org

For further enquiries please contact - email : sydneysatsang@yahoo.com

**மங்களானிபவந்து**